**O.S.No.345/2023**

**Date 25.06.2025**

**வா.சா.1 மாரியப்பன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என கோரியுள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 602 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5 1/2 செண்ட் ஆகும். தாவா சொத்து எனது தகப்பனார் உடன்பிறந்த சகோதர்கள் ராமமூர்த்தி ஆசாரி, முத்துசாமி ஆசாரி, ராமசந்திரன் ஆசாரி, மௌனம் ஆசாரி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற பாகம் பிரிவினை செய்துகொண்டதில் கிடைக்கப்பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து மேற்படி வாரிசுகளுக்கிடையே பாகப்பிரிவினை ஆவண எண். 839/2007 ன் படி புளியங்குடி சார்பதிவளார் அலுவலக ஆவணப்படி கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணத்தை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டா 1993 ல் எனது பெயரில் வருவாய் துறையால் பட்டா ஏற்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 யை பொறுத்து தாசில்தார் மூலமாக பெறவில்லை என்றாலும், கிராமநிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ–1 ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து நத்தம் வகைப்பாடு என்றால் சரிதான். 22.11.2023 தேதி பிச்சையா ராசு மனைவி ராஜலட்சுமி என்பவருக்கு நான் தாவா சொத்தை பொறுத்து புளியங்குடி அலுவலக ஆவண எண். 13/2023 ன் படி கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் மேற்படி கிரைய ஆவணத்தினை நான் எழுதி கொடுத்தேன் ஆனால் தாவா சொத்து கிடையாது. தாவா சொத்து எனது பூர்வீக சொத்து கிடையாது என்றாலும், நத்தம் வகைப்பாட்டை சார்ந்தது என்றாலும் சரியல்ல. தாவாசொத்து பூர்வீக சொத்து என்றால் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின் அசலை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் எனது முன்னோர்களுக்கு இடையே பாகப்பிரிவினை நடைபெற்றதால் அந்த அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது.

தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதியின் மாமனார் 2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு கோட்டியப்ப முதலியார் இடம் உள்ளதாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் நினைவில்லை. தாவா இடத்தை சர்வேயர் அளந்த அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கு மால்களும் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2007ல் நடைபெற்ற பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் தீர்வை ரசீது தாவா சொத்தின் மேற்கு பகுதிக்கு 1ம் பிரதிவாதியின் மாமானாரும், 2ம் பிரதிவாதியின் தகப்பனாருமான கோட்டியப்ப முதலியார் பெயரில் கடந்த 2000ம் ஆண்டு வீடு கட்டி தீர்வை செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி பழைய வீட்டை இடித்து தான் புதிய வீடு கட்டி வருகிறார் என்றாலும், பிரதிவாதி வீடு கட்டுவதை இடைஞ்சல் செய்யும்நோக்கோடு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி எத்தனை செண்டில் வீடு கட்டி வருவதாக நான் பிராதில் கூறவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதி வீட்டை இடித்து தரக்கோரி பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து நத்தம் வகைபாடு என்பதால் அனுபவத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் பழைய வீட்டை இடித்து புதிய வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டை பொறுத்து எனக்கு எந்த வித உரிமை மூலமும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 20 ஆண்டுகளுக்கு மேலாக தாவா இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருவதால் காலாவதி தோஷத்தால் எனது வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து கிரையம்கொடுத்ததை மறைத்து சாட்சியம் அளிப்பதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கின் நான்கு மால்கள் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்கள் உண்மையல்ல என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**